(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 1(5).]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2009, ஓகத்து 07, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2009, ஓகத்து 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0083 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008 ஆம் ஆண்டில் புகையிரதக் கட்டணங்களை அதிகரித்தமையால் மொத்த வருமானம் 3.671 மில்லியன் ரூபா வரை 22.4 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எனினும் இலங்கை புகையிரத சேவையின் தொழிற்பாட்டு நட்டம் 4.553 மில்லியன் ரூபா வரை 5.9 சதவீதத்தால் 2008 ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) புகையிரதக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையினால் வருமானம் அதிகரித்துள்ளபோதிலும் இலங்கை புகையிரத சேவையின் நட்டம் அதிகரிக்க காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0470 / '09

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி , திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கைக்கு மதுசாரம் இறக்குமதி செய்வதற்கான உரிமப் பத்திரம் பெற்றுள்ளவர்களால் 2007 ,2008 ஆம் ஆண்டுகளிலும் 2009 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிலும் இறக்குமதி செய்யப்பட்ட மதுசாரத்தின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) அவற்றின் பெறுமதி எவ்வளவென்பதையும் ,

(iii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அரசாங்கத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வரித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0472 / '09

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 மஹிந்த சிந்தனையை அமுல்படுத்துதலின் கீழ் உருவாக்கப்பட்ட "மக நெகும" நிறுவனம் ஓர் கூட்டுத்தாபனமா, நியதிச்சட்ட சபையா, அல்லது திணைக்களமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதன் சட்டபூர்வத்தன்மை எவ்வாறானதென்பதையும்,

(ii) அதன் தலைவரின் பெயர் மற்றும் இவரின் தகைமைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நிறுவனத்தில் பணியாற்றும் அமைய மற்றும் நிரந்தர ஊழியர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனத்தின் தலைவர் மற்றும் ஏனைய பணியாட் தொகுதியினரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0502 / '09

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சின் கீழ் வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் சங்கமொன்று உண்டென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இச்சங்கத்தின் நோக்கங்கள் யாவை,

(ii) தற்போதைய பணிப்பாளர் சபை நியமனமான திகதி யாது,

(iii) தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பதவி, பெயர், முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0503 / '09

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கத்தின் தற்போதைய தலைவர் அரசியல் கட்சியொன்றின் மத்திய சபையின் செயற்குழு உறுப்பினர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அவ்வரசியல் கட்சி யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட தலைவர் கடந்த சப்ரகமுவ மாகாணசபை தேர்தலின்போது வேட்பாளராகத் தோற்றியிருந்தார் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) ஆமெனில், பெற்ற வாக்குகள் எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

மின்வலு, சக்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 119, நிகழ்ச்சித்திட்டம் 02 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து நாநூறு மில்லியன் (ரூபா 2,400,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 119 | — | மின்வலு, சக்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்திச் செயற்பாடுகள் | |
| | — | ஆக்கப்பொருட் செலவு | ரூ. 2,400,000,000 |
| | | | ரூ. 2,400,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 9 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 16,445,510,000.

செரண்டிப் கல்வி நம்பிக்கை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2009, ஓகத்து 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0087 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போதைய அரசின் பாதுகாப்பு அமைச்சரின் பதவிக்கால ஆரம்பம் முதல் இற்றை வரை பொலிஸ் கைதில் இருக்கும்போது மரணமடைந்துள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது,

(ii) மேற்படி சந்தேகநபர்களின் பெயர்கள் யாவை,

(iii) ஒவ்வொரு சந்தேகநபரும் மரணமடைந்தது எவ்வாறு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0088 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி திட்ட பணிகளின் பிரகாரம் 50% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0388 / '09

கௌரவ சாகல ரத்நாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம், நுரைச்சோலை அனல் மின் கருத்திட்டம் மற்றும் கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று வலு ஆலை ஆகியவற்றின் மெகாவாட் ஒன்றுக்கான (EPC செலவு) உற்பத்தி மூலதனச் செலவினை, தற்போது ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்துடன் சேர்த்து அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) பின்வரும் ஆலைத்தொகுதி ஒன்வொன்றிற்குமான இயக்கத்திற்கான எரிபொருள் மற்றும் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வரியின் அலகொன்றிற்கான செலவு ஆகியவற்றை அவர் குறிப்பிடுவாரா"

(i) களனிதிஸ்ஸவில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(ii) AES ற்கு சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(iii) கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று ஆலைத்தொகுதி இணைந்த சுற்று நிலையில் மற்றும் ஒற்றைச் சுற்று நிலையில்,

(iv) யாழ்ப்பாணத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான (IPP) ஆலை மற்றும் ஏனைய சகல IPP ஆலைகளும்,

(v) யாழ்ப்பாணத்திலுள்ள Aggreko தற்காலிக ஆலை,

(vi) இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பியட் வாயு விசையாழி.

(இ) கெரவலப்பிட்டிய கருத்திட்டத்திற்காக வெஸ்ட் கோஸ்ட் பவர் லிமிட்டெட் பெற்றுக்கொண்ட கடனிற்கான அவர்கள் இணங்கிய வட்டி வீதத்தினையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0515 / ' 09

கௌரவ ஜயந்த விஜேசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சகல பாடசாலைகளுக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளில் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்தந்த விடயங்களின் பிகாரம் வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஓகத்து 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0367 / ' 09

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வரையறுக்கப்பட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(ii) 2008 ஆம் ஆண்டு வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எத்தனை,

(iii) இவர்களின் முழுப்பெயர் தனிப்பட்ட முகவரி, கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் ஆகியவை யாவை,

(iv) தற்போது இப்பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது,

(v) ஒரு பணிப்பாளர் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளாமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0368 / ' 09

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வரையறுக்கப்பட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாகப் பலவீனங்கள் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் அது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்திலிருந்து மீண்டும் அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அகற்றப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நிருவகித்த காலகட்டத்தில் கூட்டுறவுச் சங்கம் இலாபம் ஈட்டிய சந்தர்ப்பங்கள் எத்தனை,

(ii) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்திலிருந்து அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அகற்றுவதற்கான காரணம் யாது

என்பதை அவர் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0528 / ' 09

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதில் கடைபிடிக்கப்பட்ட விதி முறை என்ன என்பதையும்,

(ii) ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி ஒரே தகைமையை பூர்த்தி செய்துள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டு மாகாணங்களில் இரண்டு வகையான நியமனங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) அதனை நிவர்த்தி செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆசிரியர் உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளாமல், ஆசிரியர் பயிற்சிக்காக அரச ஆசிரியர் கலாசாலைகளில் சேர்த்து கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு வழங்கலாம் என்பதையும்,

(ii) ஆசிரியர் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் 3000./= ரூபா கொடுப்பனவு ஆசிரியர் கலாசாலையில் கல்வி நடவடிக்கைகளுக்கும் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0509 / ' 09

கௌரவ வை.எம் நவரத்ன பண்டா,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் இப்போது தங்கியுள்ள முகாம்கள் யாவையென்பதையும்,

(iii) ஒவ்வொரு முகாமிலும் உள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் மீளக் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் எப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டார்கள் என்பதையும்,

(iii) அடிப்படைத் தேவைகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்ட பின்னர் இவர்கள் குடியேற்றப்பட்டார்களா என்பதையும்,

(iv) மீளக் குடியேற்றுவதற்கான துரித நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஓகத்து 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0292 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைவரையான கடந்த 10 வருடங்களுக்கான,

(i) இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் நாடுகள், அவர்கள் இங்கு தங்கியிருந்த சராசரி காலம் ஆகியவற்றையும்,

(iii) ஈட்டப்பட்ட சராசரித் தொகையையும், செலவு செய்யப்பட்ட சராசரிச் செலவுத் தொகையையும்

வருட வாரியாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களாக உல்லாசப் பயணத்துரையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டிருந்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த 10 வருடங்களில்,

(i) நாட்டில் இருந்த ஹொட்டல் அறைகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஹொட்டல்கள் சார்ந்திருந்த நட்சத்திர வகைப் பிரிவுகளையும்

வருடவாரியாக அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0294 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009, மே, 15 இற்கு முன்பு ஒவ்வொரு நாடும் தனது கடற்படுகை உரிமை தொடர்பாக உரிமைக் கோரிக்கையை விடுக்க வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறு அமைச்சு செய்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்பிற்கு சமர்ப்பித்த கோரிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) புதிதாக உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர் என்பதையும்,

(ii) ஐக்கிய நாடுகள் சபை அல்லது பொருத்தமான உலக அமைப்பினால் உத்தியோகபூர்வமாக அது அங்கீகரிக்கப்படும் திகதி என்ன என்பதையம்,

அவர் மேலும் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0401 / '09

கௌரவ கே.வீ. சமந்த வித்தியாரத்ன,—நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உமா ஓயா கருத்திட்டத்தின் வேலைகளை ஆரம்பித்து அடிக்கல் எப்போது நாட்டப்பட்டதென்பதையும்,

(ii) உமா ஓயா கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பிரதான நிர்மாணிப்புகள் யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உமா ஓயா கருத்திட்டத்தின் அங்குரார்பண விழாவுக்காக மேற் கொள்ளப்பட்ட மொத்தச் செலவு, ஒவ்வொரு பணிக்கேற்ப வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) அங்குரார்பண விழாவுக்காக ஒதுக்கீடுகள் எவ்வாறு பெறப்பட்டன என்பதையும்,

(iii) இக்கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இப்பணத்தொகையை பெற்றுக்கொள்ளவுள்ள முறை யாதென்பதையும்,

(v) தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) உரிய கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0510 / '09

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— விஞ்ஞான, தொழிட்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005,2006,2007,2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் வரவுசெலவு திட்டத்தின் மூலம் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இதில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்கான பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் ஒதுக்கப்பட்ட மற்றும் கிடைத்த பணத்தொகைக்களுக்கிடையே ஏதேனும் வித்தியாசம் நிலவுகின்றதா என்பதையும்,

(iv) ஆமெனில், வருடாந்த ரீதியில் இது எவ்வளவென்பதையும்,

(v) இப்பணத்தொகை குறைவடைந்துள்ளதாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விஞ்ஞான, தொழிட்நுட்பவியல் அமைச்சின் கீழுள்ள பிரதானமான நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பிரதானமான நிறுவனங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0516 / '09

கௌரவ ஜயந்த விஜேசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லாத பாடசாலை களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0517/ '09

கௌரவ ஜயந்த விஜேசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்காக கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒதுக்கப்பட்ட தொகையில் திருகோணமலை மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒதுக்கப்பட்ட தொகையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, செத்தெம்பர் 11, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவதற்கு தடையாகவும் இடர்ப்பாடகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.19 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 / ' 09

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாசார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.29 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.30 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.34 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்க ளாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.37 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.38 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.40 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.41 / ' 08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.43 / '09

கௌரவ விஜித ரணவீர,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலகாலத்துக்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந் துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத்தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விட மாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்திவிட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.